பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**29 09 2026 TUESDAY 6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க, மத்திய — மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

**2)** தூய்மையே சேவை இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்ற மாநில அரசுகள் முழு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு மனோகர்லால் கேட்டுக்கொண்டுள்ளார்.

**3)** உலகத் திறன் போட்டிகளில் தமிழகத்திற்கு ஒரு வெள்ளிப்பதக்கம் உட்பட ஐந்து பதக்கங்கள் கிடைத்துள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

**4)** தமிழகத்தில் ஈரோடு, திண்டுக்கல், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**5)** ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இன்று **400** மீட்டர் தொடர் ஓட்டத்தில் இந்திய மகளிர் அணி தங்கப்பதக்கம் வென்றது.

-- இனி விரிவான செய்திகள்---

<<<<<<>>>>>>

விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க, மத்திய — மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியம் என்று, மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ் சிங் சௌகான் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற வேளாண் மாநாட்டில் பேசிய அவர், அரசியல் வேறுபாடுகளைக் கடந்து, விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றார்.

வேளாண்துறையின் வளர்ச்சி வீதம் ஆண்டுக்கு 3 முதல் 4 புள்ளி 5 சதவீத அளவிற்கு உள்ளதாக கூறிய அவர், உணவு தானிய உற்பத்தியும் அதிகரித்து, தற்போது 205 லட்சம் டன்-னை எட்டியுள்ளதாக கூறினார்.

இந்த சாதனைக்கு, அரசுத் துறைகள், விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகளின் கூட்டு முயற்சியே காரணம் என்றும் அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

வேளாண் துறையின் நீடித்த வளர்ச்சிக்கு, இயற்கை விவசாயம் மற்றும் மாற்றுப் பயிர் சாகுபடியைப் பின்பற்றுவது அவசியம் என்றும் திரு.சிவ்ராஜ் சிங் சௌகான் கூறினார்.

<<<<<<>>>>>>

தூய்மையே சேவை இயக்கத்தை, மக்கள் இயக்கமாக மாற்றுமாறு, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை, மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.மனோகர் லால் கேட்டுக் கொண்டுள்ளார்.

இம்மாதம் 17-ந் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 17-ந் தேதி வரை சுமார் ஒரு மாத காலம் நடைபெற உள்ள இந்த இயக்கத்தின் ஒரு பகுதியாக, அக்டோபர் 1-ந் தேதியன்று, “ஒரு நாள், ஒரு மணி நேரம், ஒன்றிணைந்து” தூய்மைப் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை ஆய்வு செய்த அமைச்சர், இந்த இயக்கத்தை வெறறிகரமானதாக மாற்ற, தூய்மைப் பணியில், மக்களை அதிகளவில் ஈடுபடுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

அனைத்து மாநிலங்களிலும், நாளை மறுதினம், பெருமளவில் தூய்மைப் பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதோடு, உள்ளாட்சி அமைப்புகள், பொதுநல அமைப்புகள், குடியிருப்போர் நலச் சங்கங்கள், இளைஞர் மற்றும் சமூக அமைப்புகளைச் சேர்ந்தவர்களையும் இப்பணியில் ஈடுபடுத்துமாறும் திரு.மனோகர் லால் அறிவுறுத்தினார்.

<<<<<<>>>>>>

கோவை மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று தடை செய்யப்பட்ட பொருட்களை கடத்திச் சென்றவர்களை துணிச்சலாக

சென்று பிடித்த கோவில்பாளையம் காவல் நிலையத்தின் தலைமை காவலர் திரு. வேல்முருகனை, முதலமைச்சர் திரு விஜய் இன்று தலைமைச்செயலகத்திற்கு நேரில் அழைத்து பாராட்டினார்.

விளாங்குறிச்சியிலிருந்து, அவிநாசி வரை 40 கிலோமீட்டர் தூரத்திற்கு கடத்தல்காரர்களை காரின் மேற்கூரையில் படுத்தப்படி சென்று அவர்களை பிடிப்பதற்கு திரு வேல்முருகன் சிறப்பாக செயல்பட்டார்.

பணியின்போது கவனமாகவும், பாதுகாப்பாகவும் செயல்படுமாறு முதலமைச்சர், அவரை கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டுவதற்கு கர்நாடக அரசை, மத்திய அரசு அனுமதிக்கக் கூடாது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலர் திரு வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், மேகதாதுவில் அணை கட்டப்பட்டால் தமிழகத்தில் உள்ள காவிரி டெல்டா பகுதி பாலைவனமாகிவிடும் என்றும், விவசாயமும், கால்நடைகளும் பாதிப்புக்கு உள்ளாகும் என்று கூறியுள்ளார்.

இந்த அணை கட்டும் முயற்சியை தடுத்து நிறுத்த தமிழக அரசும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பிரதமரிடம் உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை தமிழக தரப்பில் எடுத்துரைக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேகதாது அணை கட்டப்பட்டால் தமிழகத்தின் உரிமைகளும், இரு மாநிலங்களுக்கு இடையிலான நல்லுறவும் பாதிக்கப்படும் என்றும் திரு வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

சீனாவின் ஷாங்காய் நகரில் இம்மாதம் 22-ஆம் தேதிமுதல், 27-ஆம் தேதிவரை நடைபெற்ற உலக திறன் போட்டிகளில் தமிழ்நாடு ஒரு வெள்ளிப்பதக்கம் உட்பட ஐந்து பதக்கங்களை வென்றுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல் மருத்துவத்துறையில் சாதனை படைத்த திரு முகமது சலாம் இந்த வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளார்.

இந்தப் போட்டியில் தமிழ்நாடு நான்கு சிறப்பு பதக்கங்களை பெற்றுள்ளது.

ஒட்டுமொத்த இந்திய அணியும் இப்போட்டிகளில் ஆறு வெள்ளிப்பதக்கங்களையும், 20 சிறப்பு பதக்கங்களையும் வென்றுள்ளது.

இதனையடுத்து, உலகத் தரவரிசையில் பத்தாம் இடத்திற்கு இந்தியா முன்னேறியுள்ளது.

மாவட்ட மற்றும் மாநில அளவிலிருந்து திறமையான போட்டியாளர்களை கண்டறிந்து, அவர்களை தயார்படுத்தியதன் மூலம் சர்வதேச போட்டியில் தமிழ்நாடு வெள்ளிப்பதக்கம் பெற முடிந்ததாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

மாணவர்கள் போதைப்பழக்கத்திற்கு அடிமையாகாமல் சிறந்த அறிவை பெற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்று பத்திரிகை தகவல் அலுவலகத்தின் தென்மண்டல தலைமை இயக்குநர் திரு வி.பழனிசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் இளங்கலை முதலாமாண்டு மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்ச்சியில் பேசிய அவர், கிராமப்புற மாணவர்கள் உத்வேகத்துடன் கல்வி கற்க வேண்டும் என்றும், வாழ்வில் வெற்றிபெற கடின உழைப்பு அவசியம் என்றும் அவர் கூறினார்.

<<<<<<>>>>>>

தூய்மையே சேவை விழிப்புணர்வு இயக்கப்பணிகள் நாடு முழுவதும் காந்தியடிகள் பிறந்தநாளான அக்டோபர் 2-ஆம் தேதியை முன்னிட்டு முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

காந்தியடிகளின் கனவை நனவாக்கும் வகையில் இந்த இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றி, மத்திய அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

இதன் ஒருபகுதியாக, விருதுநகர் மாவட்டம் சத்திர ரெட்டியாப்பட்டி ஊராட்சியிலும் தூய்மையே சேவை விழிப்புணர்வு இன்று நடைபெற்றது.

இதில் மத்திய புள்ளியியல் துறையின் விருதுநகர் அலுவலக உதவி இயக்குநர் திரு ரத்னம், நாட்டிலும், வீட்டிலும் துய்மையையும், சுகாதாரத்தையும் காப்பதற்கு ஒத்துழைப்புத் தருமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

***(Sound Byte — ரத்னம் — 42 Sec.)***

<<<<<<>>>>>>

தமிழகத்தில் ஈரோடு, திண்டுக்கல், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு

மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

*(Sound Byte — வி ஆர் துரை - 39 Sec. )*

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

முன்னாள் மேயர் சிவராஜ்-ன் **135-**ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னையில் உள்ள அவரது சிலைக்கு மாநில அமைச்சர்கள் திரு வெங்கட்ரமணன், திரு ராஜ்மோகன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

-------------------

பிரதமர் திரு நரேந்திர மோடியின் **76-**ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, ராமேஸ்வரம் கடற்கரையில் மத்திய அரசின் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை விளக்கும் வகையில் சிறப்பு மணல் சிற்பக் கண்காட்சி இன்று நடைபெற்றது.

--------------

பெரம்பலூர் ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டம் இன்று நடைபெற்றது.

---------------

நாமக்கல்லில் மாவட்ட நீதித்துறை சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில், சமரசம் மூலம் தீர்வு — சுமூகமான தீர்வு, விரைவான தீர்வு என்ற நோக்கத்தை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

-----------------

அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழிற்கல்லூரிகளில் அரசு இடஒதுக்கீட்டின்கீழ் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்கள் இந்த கல்வியாண்டிற்கான மேற்படிப்பு உதவித்தொகைப் பெற அடுத்த மாதம் 21-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று காஞ்சிபுர மாவட்ட ஆட்சியர் திருமதி சினேகா தெரிவித்துள்ளார்.

----------------

சென்னை பூம்புகார் விற்பனை நிலையத்தில் நடைபெற்றுவரும் நவராத்திரி கொலு பொம்மைகள் கண்காட்சி மற்றும் விற்பனை அடுத்த மாதம் 31-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

------------

ஈரோட்டிலிருந்து, கோவை, பாலக்காடு, மங்களூரு வழியாக குஜராத் மாநிலம் **Udhna**-விற்கு நாளை சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது

---------------------

சென்னை இராயபுரம், தண்டையார்பேட்டை ஆகிய பகுதியில் அமைந்துள்ள கல்லூரி மாணவர் விடுதிகளின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சியர் திருமதி மாலதி ஹெலன், இன்று ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இன்று இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

ஜப்பானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் **400** மீட்டர் தொடர் ஓட்டத்தில் இந்திய மகளிர் அணி இப்பதக்கத்தை கைப்பற்றியது

தமிழகத்தை சேர்ந்த வித்யா ராம்ராஜ் மற்றும் பிராச்சி, கிரண், **Poovamma** உள்ளிட்டோர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

<<<<<<**END**>>>>>>